ஊடக அறிவித்தல் இல. – 30

# தேர்தல் ஆணைக்குழு

## பாராளுமன்றத் தேர்தல் - 2020.08.05

### அஞ்சல் மூல வாக்கெடுப்பு

2020 ஆகஸ்ட் மாதம் 05 ஆந் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலின்போது அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கு 753,037 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. அவ்விண்ணப்பங்களில் 705,085 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன், 47,430 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

02. அவ்வாறு நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்களில் கணிசமானவை, தேர்தல் நடைபெறும் தினத்தில் வாக்கெடுப்பு நிலையக் கடமைகளில் ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்க்கப்படாத வகுதிகளைச் சேர்ந்த அரசாங்க அலுவலர்களின் விண்ணப்பங்களாகும். ஒரே நபரினால் ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் தொழில்புரியும் இரண்டு இடங்களிலிருந்து அனுப்பிவைக்கப்பட்டமை, போதியளவு தகவல்கள் அளிக்கப்படாமை, தகவல்கள் தவறானவையாக உள்ளமை முதலிய காரணங்களினால் குறிப்பிடத்தக்களவான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதுடன், தேர்தல் பணியில் ஈடுபடுத்தப்படும் அலுவலர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படவில்லை.

சமன் ஸ்ரீ ரத்னாயக்க
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்

தேர்தல் ஆணைக்குழு,
சரண மாவத்தை,
இராஜகிரிய.

2020 ஜூன் 23.